Koviloor Digital Library

4072
உ 83

சிவமயம்
கரைமேலழகர் துணை

திருநீலகண்ட நாயனர்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் எழுதியது

மணமகன் :

கோனபட்டு ... வேளார் மகன்
செல்வன் ... ரத்தினம்

KOVILOOR MADALAYAM
KOVILOOR ... 507
... KARAIKUDI
PHONE: 436846)

... கள் :
... தேதுப்பட்டினம்
... வேளார் மகள்
... கமலாட்சி

ACC. NO.
4072

மணநாள் :

23 — 1 — 1973

திருமண வெளியீடு

அன்பளிப்பு :

அரு. ராம. சா. ராமச்சந்திர வேளார்,
கோனபட்டு

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்
கரைமேலழகர் துணை

திருநீலகண்ட நாயனார்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் எழுதியது

மணமகன் :

கோனுபட்டு, நா. நாராயண வேளார் மகன்
செல்வன்: **நாகரத்தினம்**

மணமகள் :

காரைக்குடி, முத்துப்பட்டணம்
நா. சாமிநாத வேளார் மகள்
செல்வி: **கமலாட்சி**

மண நாள் :

23 — 1 — 1978

திருமண வெளியீடு

அன்பளிப்பு :

அரு. ராம. சா. ராமச்சந்திர வேளார்,
கோனுபட்டு

Koviloor Digital Library

Koviloor Digital Library

வாழ்த்துரை

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE ...36846)

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

சிற்பர வியோமமாகிய திருச்சிற்றம்பலத்தில் அருட்சத்தியாகிய சிவகாமியம்மை அநவரதமும் கண்டு மகிழ, ஆனந்தக் கூத்தாடும் அம்பலவாணர் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமானது திருவாக்கிலிருந்து வெளிவந்தது திருத்தொண்டர் புராணம். அப்புராணத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் - நம்பியாண்டார் நம்பிகளது அடிச்சுவட்டைப் பின்பற்றித் தனியடியார்களில் முதல்வராக விளங்குபவர் திருநீலகண்ட நாயனர்.

கோனுபட்டில் திருநீலகண்ட நாயனர் மரபில் தோன்றியவரும், நற்குண நற்செய்கைகளை உடையவருமாகிய அன்பர், அரு ராம. சா. ராமச்சந்திர வேளார், அவரது தமயனராகிய திரு. ரா. நாராயண வேளார் புதல்வன்

Koviloor Digital Library
செல்வன் நாகரெத்தினத்துக்கும், காரைக்குடி முத்துப்பட்டணம் நா. சாமிநாத வேளார் புதல்வி செல்வி கமலாட்சிக்கும், இன்று நடைபெறும்திருமண அன்பளிப்பாகத் திருநீலகண்ட நாயனூர் வரலாற்றை நூல் வடிவில் வழங்குகிருர். இந்தச் சிவபுண்ணியச் செயலைச்செய்து பதிபுண்ணியப்பயனை அடையத் தூண்டுகோலாய் இருந்தவர்கள், நம் அன்புருவாகிய சிவகுமாரன் பழநியப்ப செட்டியாரவர்கள்.

இதனை வெளியிட்டு வழங்குகிற அன்பர் ராமச்சந்திர வேளார் அவர்களுக்கும், வெளியிடத் தூண்டுகோலாயிருந்த சிவபூசைச் செல்வர் சிவகுமாரன் பழநியப்ப செட்டியாரவர்களுக்கும், மணமக்களுக்கும், உற்ருர் உறவினர்களுக்கும் எல்லா வளங்களும் மென்மேலும் உண்டாக, அங்கயற்கண்ணி பங்குடைய ஆலவாயண்ணல் அருள்புரிவாராக.

Koviloor Digital Library

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருநீலகண்ட நாயனார்

கருணைக் கடலாகிய சிவபெருமான் ஐந்தொழிற் கூத்து ஆடுகின்ற தில்லையம்பதியில் குயவர் குலத்தில் ஒரு பெரியவர் அவதரித்தார். அவர் அம்பலவாணரிடத்தில் பேரன்பு பூண்டவர். பொய்மை நீங்கிய அறவழியில் வாழ்பவர். சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்பவர். இல்லறத்தை நல்லறமாகக் கொண்டவர். தம் குலத் தொழிலாகிய மண் பாண்டங்களைச் செய்து, அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழ்ந்தவர்.

பிச்சைப் பாத்திரமாகிய திருவோடுகளைச் செய்து, சிவனடியார்களுக்கு மகிழ்வோடு வழங்கும் நியமத்தை மேற்கொண்டிருந்த அவர், இளமைப்

Koviloor Digital Library
பருவம் காரணமாகச், சிற்றின்பத் துறையில் மிகுதியாக ஈடுபட்டார். அவரது மனைவியார், அருந்ததியின் மேம்பட்ட கற்பு ஒழுக்கமும், திருமகளின் மேம்பட்ட அழகும் உடையவர்.

எல்லா உலகங்களும் உய்யும் பொருட்டு முன் ஒரு காலத்தில் சிவபெருமான், திருப்பாற்கடலில் பொங்கியெழுந்த ஆலகால விஷத்தை அமுது செய்தபோது, அது உள்ளே செல்லாமல் அவரது கண்டத்திலேயே நின்றுவிட்டது. அந்த நீலகண்டத்தையே இப்பெரியவர் எப்பொழுதும் நினைந்து நெஞ்சம் உருகித் "திருநீலகண்டம், திருநீலகண்டம்" என்று கூறிப் போற்றி வருவார். ஆதலால் அவரை எல்லோரும் "திருநீலகண்டர்" என்றே அழைக்கலாயினர்.

திருநீலகண்டர் ஒருநாள் சிற்றின்ப வேட்கை மிகுந்து, ஒரு பரத்தை வீட்டிற்குச் சென்று வந்தார். அதை அறிந்த அவர் மனைவியார்,

Koviloor Digital Library

மானம் பொருது அவர்பால் ஊடல் கொண்டார். என்றாலும் மனைவாழ்க்கைக்குரிய எவற்றிலும் குறைவின்றி இருந்து கணவரோடு உடனுறைவதற்கு மட்டும் ஒருப்படாமல் வாழ்ந்து வந்தார். மனைவியாரது ஊடலைப் போக்கக் கருதிய திருநீலகண்டர் ஒருநாள் இன்னுரைகள்பலபேசி, அவரைத் தழுவ முயன்றார். அப்போது அம்மையார், "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று, ஆணையிட்டு ஒதுங்கினார் திருநீலகண்டத்தின்பால் பேரன்புகொண்ட நாயனார், ஆணையைக் கேட்டதும் அம்மையாரை அகன்று இவர் "எம்மை" என்று பன்மையிற் சொல்லியதனால், இனி மற்ற மாதரையும் மனத்தினாலும் தீண்டமாட்டேன்" என்று உறுதி கொண்டு விட்டார். இருவரும் ஆணையைப் பிறரறியாமல் காத்து, இல்வாழ்க்கையையும் சிவனடியார் திருப்பணியையும் முறையாக நடத்தி வந்தனர்.

Koviloor Digital Library

ஆண்டுகள் பல சென்றன. இளமை கழிந்தது மூப்பு வந்து தளர்வுற்றனர் எனினும் திருப்பணி வழுவின்றி நடந்து வந்தது. சிவபெருமான் இவர்களது பெருமையை உலகிற்கு உணர்த்தத் திருவுளம் கொண்டார், ஒரு சிவயோகியின் வடிவத்தில் கையில் திருவோடு ஒன்றை ஏந்தித் திருநீலகண்டரது திருமனையை அடைந்தார். சிவயோகியாரைக் கண்ட திருநீலகண்டர் எதிர் கொண்டு வணங்கி வீட்டினுள் அழைத்துச் சென்று ஆசனத்திருத்தி முறைப்படி அருச்சனை வழிபாடுகள் செய்து 'நான் செய்யத்தக்க பணிவிடை யாது' என்று பணிவாக வினவினர்.

சிவயோகியார் "அன்பனே! இந்தத் திருவோட்டை நீ பாதுகாப்பாகச் சிலநாட்கள் வைத்திருந்து, நாம் மீண்டும் வந்து கேட்கும்போது தருதல் வேண்டும். இது இணையற்றதும் தன்னைச் சார்ந்த எல்லாவற்றையும் தூய்மை செய்வதும், பொன்னையும் மணியையும்விட மேலாகப் போற்ற வேண்டுவதும் ஆகும்'' என்றுகூறித் திருவோட்டைக்

Koviloor Digital Library

கொடுத்தருளினர். அதை வணங்கி வாங்கிக் கொண்ட நாயனர், வீட்டில் பாதுகாப்பான இடத்தில் சேமித்து வைத்துத் திரும்பி வந்து சிவயோகியாரை வணங்க, அவர் விடைபெற்றுச் சென்ருர்.

சில நாட்கள் சென்றன. சிவபெருமான் முன்னைச் சிவயோகியார் வடிவத்துடன் திருநீலகண்டரிடம் வந்து திருவோட்டைத் திரும்பத் தரும்படி கேட்டார். ஆனல் அவ்வோடு வைத்திருந்த இடத்திலிருந்து மறைந்துபோகும்படி திருவருள் முன்னரே செய்துள்ளது என்பதை யார் அறிவார்? நாயனர் விரைந்து சென்று வைத்த இடத்தில் ஓட்டைத் தேடினர், காணப்பெறவில்லை மயக்கமுற்று மற்ற இடங்களிலும் தேட எவ்விடத்திலும் அது தென்படவில்லை. திகைப்படைந்து நின்ற நாயனர், நீண்ட நேரமாகியும் திரும்பி வராததைக் கண்ட சிவயோகியார், விரைவில் வரும்படி உரக்கக் கூவினர். திருத்தொண்டர் திரும்பி வந்து சிவயோகியார் திருவடிகளில் விழுந்து

Koviloor Digital Library

வணங்கி, அவர் வைத்த ஓடு காணமற் போனதை யும், அதற்குப் பதிலாகப் புது ஓடு தருவதாகவும் சொல்லிப் பிழை பொறுக்க வேண்டினர்.

சிவயோகியார் கோபம் கொண்டவராய் உன்னிடம் வைத்த மண் ஓட்டைத் தவிர, வேறு பொன்னினல் ஓடு அமைத்துத் தந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். நான் முன்பு வைத்துச்சென்ற ஓட்டையே கொண்டுவா என்ருர். திருநீலகண்டர், சிவயோகியாரை மீண்டும் வணங்கி "பெரியவரே! நீர் என்னிடம் கொடுத்து வைத் திருந்த ஓடு காணமற் போனபடியினலேயே, அதற்குப்பதிலாக வேறு ஒரு புதிய நல்ல ஓடு தருவ தாக அடியேன் கூறுகிறேன். அதனைத் தேவரீர் ஏற்றுக் கொள்ளாமல் என்மேல் கோபம் கொள்வது என் உணர்வை ஒழித்து விட்டது'' என்ருர்.

சிவயோகியார் ''நான் உன்னிடம் அடைக்கல மாக வைத்த பொருளை நீ கவர்ந்து கொண்டு வஞ்சகமாக நடிக்கின்ருய். பழிக்கு ஒரு சிறிதும்

Koviloor Digital Library

அஞ்சினுயில்லை. இவ்வூரிலுள்ளோர் யாவரும் காண உன்னை நான் வளைத்துப் பிடித்து ஓட்டைக் கொண்டேயல்லாமல் போகமாட்டேன்'' என்ருர். நாயனுர் "ஐயா! நான் ஓட்டை அபகரித்துக் கொள்ளவில்லை. என் உள்ளத்திலும் கள்ளமில்லை என்பதை மெய்ப்பிக்க, நீர் எதைச் சொன்னுலும் கேட்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்ருர். உடனே சிவயோகியார் "உன் மகனைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி ஓட்டை நான் அபகரிக்கவில்லை என்று சத்தியம் செய்வாயாக'' என்ருர். நாயனுர் அவ்வாறுசெய்ய அடியேனுக்குப் புதல்வன் இல்லை" வேறுசெய்ய வேண்டுவதை அருளுவீர் என்ருர்.

சிவயோகியார் ''அவ்வாருயின் உனது மனைவியைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிக் கூறுவாயாக'' என்ருர். திருநீலகண்டர் ''நானும் என் மனைவியும் ஒரு சபதத்தினுல் கைப்பற்றி மூழ்க இசைவில்லாமலிருக்கிறது. நானே நீரில் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன்'' என்ருர். கேட்ட சிவயோகியார் மிகவும் வெகுண்டு ''தந்த பொருளை

Koviloor Digital Library
திருப்பித் தராமலும், அதைக் கவர்ந்துகொள்ள வில்லை என்பதை மெய்ப்பிக்க, மனைவியின் கையைப் பற்றி நீரில் மூழ்கிச் சத்தியம் செய்து தராமலும் மனம் வலுத்து இருக்கின்றாய். தில்லைவாழந்தணர் களது அவைக்குச் சென்று இதைக்கூறி உரிய முடிவை அறிவேன்" என்று வெளிச் சென்றார். நாயனாரும் அவர் பின்னே போயினர்.

நல்லொழுக்கம் மிக்கவர்களும் நால் வேத விற்பன்னர்களுமாகிய தில்லைவாழந்தணர்களது பேரவைக்குச் சிவயோகியார் சென்று "ஐயன்மீர்! இத்திருநீலகண்டனிடத்து நான் ஒரு திருவோடு கொடுத்து வைத்திருந்தேன். அதனைத் திருப்பித் தர மனமில்லாமல், அது காணாமற் போய்விட்டது என்றுகூறினான். அங்ஙனமாயின், மனைவி கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்துவிடு" என்று சொன்னேன். அதற்கும் உடன்படாமல் உங்கள் முன்னே வந்து நிற்கின்றா னென்று கூறினர். அந்தணர்கள் நாயனாரைப்

Koviloor Digital Library
பார்த்து "நீர் என்ன சொல்லுகிறீர்'' என்று கேட்டார்கள். அவர் "ஐயன்மீர்! பெரிய செல்வம் என்று இவர் தந்த திருவோடு வைத்த இடத்திலிருந்து காணமல் போய்விட்டது. இது உண்மை" என்று சொன்னர்.

தில்லைவாழந்தணர்கள் நாயனரைப் பார்த்து ''ஓடு காணமற் போய்விட்டால் இவர் விரும்புகிறபடி மனைவியின் கையைப்பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்வதுதான் நியாயமென்று முடிவு கூறினர்கள். நாயனர் சிவயோகியாரைப் பார்த்து "பொருத்தமான முறையில் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்கிறேன்" என்று, அவருடன் கூட வீட்டுக்கு வந்து மனைவியாரை அழைத்துக் கொண்டு ''திருப்புலீச்சரம்" என்னும் சிவாலயத்துக்கு முன்னிருக்கும் திருக்குளத்தை அடைந்தார்.

பல ஆண்டுகளாகத் தாம் கைக்கொண்டொழுகிய திருவாணையைப் பாதுகாக்கும் உறுதியுடையவராய் ஒரு மூங்கில் தண்டின் ஒருபுறத்தை

Koviloor Digital Library
மனைவியார் பிடிக்க, மற்றொரு புறத்தைத் தாம் பிடித்துக்கொண்டு குளத்தில் இறங்கினர். அப்போது சிவயோகியார், "மனைவியின் கையைப் பற்றிக்கொண்டு மூழ்குக" என்று கூறத் திருநீலகண்டர் பல ஆண்டுகளாக மனைவியைத் தீண்டாதிருக்கும் செய்தியை யாவரும் அறியக்கூறி மூங்கிலைப் பிடித்தபடியே மனைவியுடன் மூழ்கி எழுந்தார்.

திருக்குளத்தில் முழுகி எழுந்த இருவரும் முதுமை நீங்கி இளமைபெற்று விளங்கினர். இவ்வதிசயத்தைக் கண்டவரனைவரும் வியப்படைந்தார்கள். சிவயோகியாராக வந்த சிவபெருமான் திடீரென்று மறைந்து உமாதேவியாருடன் வெள்விடைமீதிற் காட்சி கொடுத்தருளினர். திருநீலகண்டரின் பெருமையை மண்ணவரும் விண்ணவரும் கண்டு துதித்தார்கள். சிவபெருமான் நாயனரையும் அவர் மனைவியாரையும் நோக்கி "ஐம்புலனை வென்ற அன்பர்களே நீங்கள் இளமைப்

Koviloor Digital Library
பருவத்துடன் எப்போதும் நம்மிடத்தில் இருப்பீர்களாக" என்று அருள் செய்தார். நாயனாரும் அவரது மனைவியாரும் இளமையுடன் சிவலோகம் அடைந்து, பேரின்பப்பேறு பெற்றார்கள்.

திருநீலகண்ட நாயனார் திருவடி வாழ்க!
நலமே தழைக.

Koviloor Digital Library

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

— திருக்குறள்.

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
Koviloor Digital Library

வாழ்த்து

மங்கையொரு பங்குடைய மாதேவ னின்னருளால்
பிங்களதை யிரைந்திற் பேணிமண - மங்கலங்கொள்
நங்கை கமலாட்சி நன்ருக ரத்தினவேள்
இங்குநனி வாழ்க இசைந்து.

நலமே தழைக.

கலைமணி பிரஸ், தேவகோட்டை